19th November 1963]

திரு. ஆர். ஜீவரத்தினம் : நான்காவது ஐந்தாண்டு திட்டத்திலாவது சேர்த்துக்கொள்ளப்படுமா? 10-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான்காவது திட்டம் இன்னும் தயாரிக்கப்படவில்லை.

சென்னை நகரம் 'ஏ' பிரிவாக்குதல்

*249 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரை 'ஏ' பிரிவு நகரமாக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) சுற்றுப்புற இடங்களில் ஏதேனும் சென்னை நகரத்தோடு சேர்க்கப்பட்டிருக்கின்றதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The Government of India, with whom the decision rests, have not yet classified Madras as 'A' Class city.

(b) No.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், இந்தப் பிரச்னை சம்பந்தமாக ஏற்கனவே கேட்டபோது, முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் 'ஏ' பிரிவாக ஆக்குவதற்கு தனிப்பட்ட முறையில் முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் அது சீக்கிரத்தில் நிறைவேறும் என்றும் சொன்னார்கள். அப்படியிருந்த நிலைமையை விட்டு விடாமல் இப்போதைய முதலமைச்சர் அவர்கள் ஈடுபட்டு இடையிலே விட்டதை, தொடர்ந்து வேலை செய்து 'ஏ' பிரிவு நகராக மாற்றுவதற்கு வேண்டிய வழிவகை செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இடையிலே நின்றுவிடவில்லை. மேலும் அபிவிருத்தி அடைந்து கொண்டுதான் இருக்கிறது. சீக்கிரத்திலேயே ஆகலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : கடந்த மாதத்தில் தபால் ஊழியர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டு பேசும் போது இந்நாள் முதலமைச்சர் அவர்கள் சென்னையை அடுத்துள்ள இடங்களை எல்லாம் தபால் வட்டங்களோடு சேர்க்கப்பட்டிருப்பதற்கு "பொருள்" இல்லாமல் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்விதம் குறிப்பிட்ட "பொருள்" என்ன என்பதை இப்போது சொல்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதில் ஒன்றும் விசேஷ பொருள் இல்லை.

MR. SPEAKER : I think the House has no objection to extend the question hour till we dispose of the remaining questions.